# கொழும்பில் தற்கொலைப்படை மீண்டும் ஊடுருவல்

## பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)
விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படைபிரிவை சேர்ந்த மூன்று அங்கத்தவர் கொண்ட குழு ஒன்று தலைநகரில் ஊடுருவியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.
இதனையடுத்து கொழும்பில் நேற்று பாதுகாப்பு ஏற்பாடு
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 4 இதழ்: 190
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 20-8-1991

## ஆனையிறவு தெற்குபகுதியில் விமான தாக்குதல் ஆரம்பம்

(கொழும்பு)
ஆனையிறவு தெற்குப் பகுதியில் விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது விமானப்படை விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை ஆரம்பித்திருப்பதாக இராணுவ தரப்பில் தெரிவிக்
(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைச் சிறுவனுக்கு சென்னையில் கத்திக்குத்து

(சென்னை)
இலங்கைத் தமிழ்ச் சிறுவன் ஒருவன் சென்னையில் கத்திக்குத்திற்கு இலக்காகியுள்ளான்.
வரதராஜப்பெருமாள், பத்மநாபாவுக்கு உறவினர்களாகக் கருதப்படும் ஒருவர் இல்லத்திற்கு சென்ற சிலர் பணம்
(4ம் பக்கம் பார்க்க)

# சோவியத்தில் இடம்பெற்ற இராணுவ அதிரடிப் புரட்சியில் கொர்பச்சேவ் பதவி கவிழ்ப்பு!

## அமெரிக்கா உட்பட உலக நாடுகள் அதிர்ச்சி!!

(மாஸ்கோ)
சோவியத் ஜனாதிபதி திரு. மிக்கைல் கொர்பச்சேவ் இராணுவ அதிரடிப் புரட்சியின் மூலம் நேற்று பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்டு தற்போது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். எனினும் அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பதுபற்றி இதுவரை ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

திரு கொர்பச்சேவின் பதவி நீக்கம் பற்றி நாட்டை நிர்வகிக்க அமைக்கப்பட்ட எட்டுப்பேர் கொண்ட குழு நேற்று அறிவித்தது.

கம்யூனிஸ தீவிர போக்குடையோர், கே. ஜீ. பி. அதிகாரிகள், பாதுகாப்புப்படைத் தளபதிகள் ஆகியோர் அடங்கிய இக்குழுவினரால் கொர்பச்சேவின் இடத்துக்கு உதவி ஜனாதிபதி திரு. ஜெனடி ஜெனயோ நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பழைய சோவியத் யூனியனுக்குப் பதிலாக புதிய சமஷ்டி அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்கான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடும் வைபவத்திற்கு திரு. கொர்பச்சேவ் தலைமைதாங்கவிருந்த சில மணித்தியாலத்திற்கு முன்னர் கருங்கடல் பகுதியில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தபோது அவர் பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்டார்.

## அரண்மனைப் புரட்சி

இதற்கிடையில் அதிபர் கொர்பச்சேவ் சோவியத்கம்யூனிஸ்ட் கட்சி தலைமைப்பதவியிலிருந்தும் அப்புறப்படுத்தப்பட்டாரா என்பது பற்றி உடனடியாக எதுவும் தெரிய வரவில்லை.

இது ஓர் 'அரண்மனைப் புரட்சி' என பீ. பி. ஸி, வர்ணித்தது.

பிந்திக்கிடைத்த தகவலின்படி மாஸ்கோ உட்பட பல நகரங்களில் கவச வாகனங்கள் சகிதம் இராணுவம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

## வீட்டுக் காவலில் தடுப்பு?

திரு. கொர்பச்சேவ் அவரது அரசாங்க இல்லத்தில் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக ஏ. எவ். பி. ஸ்தாபனம் அறிவித்தது.

ஆனால் ஏ. பி. ஸ்தாபன அறிவிப்பின்படி கருங்கடலுக்கு அருகில் ஸ்கெனியாவில் உள்ள அவரது விடுமுறைக் கால வாசஸ்தலத்தில் அவர் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## உடல்நலக் குறைவு காரணம்

இதுபற்றி 'டாஸ்' மேலும் தெரிவிக்கையில் அதிபர் கொர்பச்சேவ் உடல் நலக் குறைவு காரணமாக பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த 6 மாதத்திற்கு சோவியத்தில் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

60 வயதான சோவியத் அதிபர் 1985 இல் சோவியத் கம்
[4-ம் பக்கம் பார்க்க]

## விடுமுறையில் இருந்தார்

இந்த பதவி கவிழ்ந்தபோது அதிபர் கொர்ப்பச்சேவ் விடுமுறையை கழிப்பதற்காக ஸ்கெனியா என்னுமிடத்தில் இருந்தார். அவர் நேற்று மாஸ்கோ திரும்பி ஒப்பந்தமொன்றில் கையெழுத்திடுவதாக இருந்தது.

## பதற்றநிலை நிலவுகிறது

இதேவேளையில் சோவியத் அதிபரின் பதவிகவிழ்ப்பு முயற்சியினால் சோவியத் நாட்டில் பெரும் பதற்றம் நிலவுவதாகவும் துரித கதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சோவியத் அதிபரின் பதவி கவிழ்ப்பு குறித்து உலக நாடுகள் அதிர்ச்சி தெரிவித்துள்ளன. (4ம் பக்கமும் பார்க்க)

## கர்நாடகத்தில ஈழப் போராளிகளை பிடிக்க தேடுதல் வேட்டை

(பெங்களூர்)
கர்நாடக மாநிலத்தில் ஈழப்போராளிகளைத் தேடிப் பிடிக்கும் நடவடிக்கையில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.
பெங்களூர் நகரிலுள்ளமருத்துவமனையொன்று நேற்று பொலிசாரினால் சுற்றி வளைக்கப்பட்டபோது அங்கிருந்த ஒருவர் சயனைட் அருந்தி தற்
(4ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நாணயம் மீட்கப்பட்டதாம்

(சென்னை)
தமிழகத்தில் 'புலிகளின் நாணயம்' கைதுசெய்யப்பட்ட ஒருவரிடமிருந்து மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இவரை பொலிசார் கைது செய்ய முனைந்தபோது இவர் 'சயனைட்' அருந்த முற்பட்டதாகவும் எனினும் பொலிசார் இவரைப் பிடித்துவிட்டதாக
(4ம் பக்கம் பார்க்க)

## யு. எஸ். எய்ட் உதவியை மீண்டும் வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம்)
77 ஆயிரம் வறிய குடும்பங்களுக்கு யூ. எஸ். எய்ட் நிறுவனம் வழங்கிய உதவியை மீண்டும் வழங்கும்படி யாழ். அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
சுயதொழில் கடன் உதவியாக 45 ஆயிரம் குடும்பங்
[4-ம் பக்கம் பார்க்க]

## உணவுப் பொருள்களை காங்கேசன் துறைமுகத்தில் இறக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)
வடபகுதிக்கு கொழும்பிலிருந்து கப்பலில் வரும் உணவு வகைகள் இனிமேல் காங்கேசன்துறை துறைமுகத்தில்தான் இறக்கப்படுமென அரசு நேற்று அறிவித்தது.

காங்கேசன்துறை துறைமுக உணவுக்களஞ்சியத்தில் தற்போது இருக்கும் 500 தொன் உணவுப்பொருள்களை உடன் கையேற்குமாறு யாழ். அரச அதிபருக்கு அறிவித்துள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை துறைமுக அபிவிருத்தி வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதாலேயே மேற்படி மாற்றம் கொண்டுவரப்பட இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

# வரி விளம்பரம்

### பழைய புத்தகங்கள்

பழைய புத்தகங்கள் சஞ்சிகைகள் விலைக்கு வாங்குவோம். புத்தகக்கடை கல்வியங்காடு. (சி-5127)

### ஜீவாகாரம்

இது ஓர் உள்ளூர் உற்பத்தி. இதில் தாய் – சேய்க்குரிய ஜீவசத்துக்கள் அடங்கியுள்ளது. கிடைக்குமிடம் அண்ணா கோப்பிக் கடை, யாழ்ப்பாணம். (ஏ-1500)

### அதிஷ்டம் அழைக்கின்றது

தீராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், விவாகத்தடை, தெய்வசாபம், குருசாபம், நாகசாபம் போன்றவை நீங்கி அதிஷ்டத்துடன் வாழ வழி காட்டுகின்றோம்: நிவாரண யந்திரங்களும் நாலூறு கண்ணூறு யந்திரங்களும் வழங்குகின்றோம். நேரில் சாதகத்துடன் வரவும்: ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை றோட். [அரசடிச் சந்தி] நல்லூர். (சி 5116)

### கவனிக்கவும்

மில்க்வைற் சலவைத்தூள் நீல வண்ணத்தில் அச்சடிக்கப்பட்ட புதிய (பக்கற்றில் விற்பனையாகின்றது. வழமையான பொலித்தீன் பக்கற் கிடையாததால்) 50 கிறாம் அடைக்கப்பட்டது. 100 வெற்றுப் பக்கற்சேர்ப்பித்து அழகியதோர் உள்ளூர் உற்பத்தி லேஞ்சி அன்பளிப்பாகப் பெறுங்கள். மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி-1514)

### வானொலி நாடகம்

இன்று விற்பனையாகின்ற இரண்டே இரண்டு வானொலி நாடக நூல்கள் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய கெட்டிக்காரர்கள் 25/-, முதலாம்பிள்ளை 30/- மாணவர்களும் படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்றவை. (சி-5142)

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## வெளி நிலைப் பட்டப்படிப்பிற்காகப் பதிவு செய்தல் 1990/91

(வர்த்தகமுதற் தேர்வு/ கலை முதற் தேர்வு)

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தில் 1990/91 கல்வியாண்டில் வெளி நிலைத்தேர்வு நாடிகளாக வர்த்தகமுதற்தேர்வு/கலை முதற் தேர்வுகளுக்குப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்ற ஆட்களிடமிருந்து 1991 செப்டெம்பர் 30 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப் படும்.

விண்ணப்பப் படிவங்களும் உரிய விபரங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வெளிநிலைப் பதிவு தேர்வு அலகிலிருந்து நேரடியாகவோ தபால்மூலமாகவோ 1991 ஆகஸ்ட் 21ம் தேதி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவத்தையும் பாடத் திட்டத்தின் பிரதியையும் நேரடியாக பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிறுப்பரிடம் 50/- ரூபா செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தையும் பாடத் திட்டத்தின் பிரதியையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் சுய முகவரியிட்டு ரூபா 08/- பெறுமதியுடைய முத்திரையொட்டப்பட்ட 38X25 ச.மீ. அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல்வேண்டும்.

இவ்வாண்டு கலை முதல் தேர்வு / வர்த்தக முதல் தேர்வு என்பனவற்றிலிருந்துவிலக்குப்பெற விரும்புவோர்அல்லது கலை முதல் தேர்வு/வர்த்தக முதல் தேர்வு தவிர்ந்த ஏனைய தேர்வுகளுக்காக தமது பதிவுகளை மற்றைய பல்கலைக்கழகங்களிலிருந்து இப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றிக்கொள்ள விரும்புவோர் ஆகியவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஏ-1517) பதிவாளர்

---

## நடிப்பு ஆர்வமுள்ளோர் கவனத்திற்கு

"முரசொலி" நிறுவனத்தின் ஆதரவில் "நாடக அரங்கக் கல்லூரியினர்" தயாரிக்க இருக்கும் பாரதியின்

**"பாஞ்சாலி சபதம்"**

நாடகத்தில் நடிப்பதற்கு நடிகர், நடிகையர் தேவை.


பங்குபற்ற விரும்புவோர்
24-8-91 சனிக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு
யாழ்/செங்குந்த இந்துக்கல்லூரியில்
(கல்வியங்காடு சந்தைக் கருகாமையில்)
சமுகம்தரவும்.

நாடக அரங்கக் கல்லூரி

[எ-1516]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் : 08 . 05 . 1973

தாயக மண்ணில் : 31 . 08 . 1990

திதி: 20 - 08 - 91

### (வீரவேங்கை ஆனந்)

முத்துக்கிருஷ்ணன் குணாளன் (புளியங்கூடல்)

எம்மண்ணைக் காக்க தன்னுயிர் நீத்த
உத்தமனே குணாளா – நீ
புயலாக எழுந்து புலியோடு சேர்ந்து
போர்க்களம் புகுந்தாய்
அடியோடு கோட்டை எதிரியை அழித்திட
புலியெனப் பாய்ந்தாய்
எதிரியின் குண்டை ஏந்தியே மடிந்தாய்
எம்இனத்தின் விலங்கினை ஒடித்தாய்
உன்கனவு நனவாக இறைஅருள்
வேண்டி நிற்கும்.

புளியங்கூடல் சி. தர்மலிங்கம்.
(சி 5139) குடும்பத்தினர்

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கந்தையா - சாமிநாதன்

(உரிமையாளர் ஐங்கரன் ஸ்ரோர்ஸ், பரந்தன்.)

மலர்வு : 27-12-1941 உதிர்வு : 20-08-1990

திதி : 08-09-1991

ஓராண்டு செல்லுறும் உம் நினைவு எம்மைவிட்டு அகல வில்லை. உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம.

பிரிவால் துயருறும்
தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரங்கள்.
மைத்துனர்கள், மைத்துனிமார்கள்.

புற்றளை, புலோலி. (சி 5117)

---

## கம்பியூட்டர் கல்வி

★ Diploma in Data Processing and Computer programming in Basic Language.

★ d Base III+, Lotus 1-2-3, Word Processing

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்:


**24-08-91 10-00 a.m.**
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

**28-08-91 10-00 a. m.**
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்)

கட்டணம் பகுதிபகுதியாகச் செலுத்தலாம்
தமிழில் விளக்கம் அளிக்கப்படும்.

பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கட்கு:




**UNIKCO COMPUTER CENTRE**
37, Clock Tower Road,
Jaffna.

(வெலிங்டன் சந்திக்கு வடக்கு பக்கமாக உள்ள மேல்மாடி)

(ஏ 1515)

---

## உலகின் மூலைமுடுக்கெல்லாம் தபால்களை பத்திரமாக எடுத்துச்செல்வது

# DHL துரித தபால்சேவை

யாழ்ப்பாணத்தில் உறவினரின் தபால்களை ஒப்படைக்க

C/o, Cosmos Marketing Services,
120, K. K. S. Road, Jaffna.
(பழைய யூனியன் ரஸ்ட் இன்வெஸ்ட்மென்ட் கட்டிடம்)

DHL WORLDWIDE EXPRESS

(ஏ-1512)

## உ. அ. அ. அலுவலகத்தில் மினிக்கச்சேரி

(மட்டக்களப்பு)

அக்டோபர்மாதத்திலிருந்து கல்முனை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் மினி கச்சேரியாக இயங்கவிருக்கிறது.

இதுவரை காலமும் அம்பாறை செயலகத்தின் நிர்வாகத்தின் கீழ் கையாளப்பட்டு வந்த பல வேலைகள் இனி இம் மினி கச்சேரியிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

காணி விவகாரங்கள் தொடர்பான அனைத்து பணிகளும் இம் மினி கச்சேரியின் கீழ் வரவிருக்கிறது. அத்துடன் கிராமசேவை அலுவலர்களையும் அலுவலக ஊழியர்களையும் நியமிப்பது, அவர்களுக்கு சம்பளம் வழங்குவது, முறைப்பாடுகளை விசாரிப்பது போன்ற பணிகளும் இம் மினி கச்சேரியின் கீழ் வரவிருக்கின்றன. [மா]

## ஆனையிறவு சுற்றுடலிலிருந்து 1,500 குடும்பம் இடம்பெயர்வு

(புலோலி)

ஆனையிறவுச் சுற்றுடல்களான இயக்கச்சி, பரந்தன், முரசுமோட்டை பகுதிகளைச் சேர்ந்த சுமார் 1,500 குடும்பங்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இரணைப்பாலை விசுவமடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளன.

இவர்களுக்கான உடனடி உலர் உணவு நிவாரணம் முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் ஏற்பாட்டின் பேரில் வழங்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் உணவுப்பற்றுக்குறை ஏற்பட்டதால் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருடன் தொடர்புகொண்டதையடுத்து தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த கிளிநொச்சி மாவட்டவாசிகளுக்கு கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டுவருகிறது.

இதேவேளை வடமராட்சி கிழக்குப் பகுதியான வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு பகுதியிலிருந்து இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்தோரில் 120 குடும்பங்கள் முல்லைத்தீவுமாவட்டத்தில் இரணைப்பாலை, விசுவமடு ஆகியஇடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர் இவர்களுக்கான உலர்உணவு விநியோகத்தை முல்லைத்தீவு கச்சேரி மேற்கொண்டுள்ளது. [61]

## லொறி விபத்தில் ஒருவர் பலி

(பூநகரி)

வவுனியாவிலிருந்து உணவுப் பொருட்களை யாழ்ப்பாணம் அனுப்புவதற்காக வந்து கொண்டிருந்த லொறி கடந்த 15ம் தேதி அதிகாலை கரடிப் போக்குப் பகுதியில் மதகு ஒன்றில் மோதிக் குடைசாய்ந்தது. இந்த விபத்தில் லொறியில் பயணம்செய்த தர்மகுலம் என்பவர் அதே இடத்தில் பலியானார். [23]

## போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவலகள் திணைக்கள கலாசார உத்தியோகத்தர்கள் நியமனத்திற்கான போட்டிப்பரீட்சை செப்டம்பர்மாதம் 7ந் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

## ஷெல், விமான தாக்குதல்

(ஊர்காவற்றுறை)

தாழையடி - செம்பியன்பற்று கரையோரப் பகுதிகளில் தொடர்ந்து ஷெல் விமானத் தாக்குதல் நடைபெற்று வருவதாக வீடு பார்க்கச்சென்ற செம்பியன்பற்றைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

அங்குள்ள மக்கள் கற்கோவளம் - அடம்பன் - நாகர் கோவில் - ஆனைக்கோட்டைப் பகுதிக்கு இடம்பெயர்ந்து வந்துள்ளனர்.

## "தமிழீழத் தேசியப் படை எல்லைகளை மீட்கும் வரை போராடும்"

[யாழ்ப்பாணம்]

"தமிழின விடிவிற்காக தம் உயிரையே கொடுக்கத் தயாராகவும், அவர்களுக்காகவே தமது வாழ்க்கையைத் தியாகம் செய்யவும் துணிந்துள்ள தமிழீழத் தேசியப்படை தமிழீழத்தின் எல்லைகளை மீட்கும் வரை போராடும். தமிழீழ மக்களின் உரிமைகளைப் பெற்றெடுக்கும் வரை போர் தொடர்ந்து கொண்டே போகும்"

புங்குடுதீவில் அண்மையில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு தலைமைச் செயலக உறுப்பினர் திரு. கலையரசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்; தமிழரின் வரலாற்றை நாம் நான்கு வகையாகப் பார்க்கலாம். எமது இறைமைகளைப் பாதுகாத்து, எம்மை நாமே ஆண்ட எமது தமிழ் அரசர் காலம் முதலாவதாகும் இக்காலத்தையும் நாம் பொற்காலம் என்று கூற முடியாது. சமூக ஏற்றத் தாழ்வுகள், சாதி வேறுபாடுகள். பெண்ணடிமைத் தனம் மேலோங்கி இருந்தது இரண்டாவதாக நிலச்சுவாந்தர்கள் எம்மைப் பிரதிநிதித்துவப் படுத்தினர். இதிலும் மக்கள் இவர்களின் அடிமைகளாகவே பயன்படுத்தப்பட்டனர். அதற்கடுத்தபடியாக 1948-ம் ஆண்டுக்குப் பின்னர் எமது சமுதாயத்திலிருந்து நடுத்தரவர்க்கப் படித்தவர்கள் எம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தினர். இதில் எமது மக்களைப் பிரதிநித்துவப் படுத்தியவர்கள் தமது சுய நலத்துக்காக மக்களின் வாக்குகளைப் பயன்படுத்தினர். அதற்கடுத்த நான்காவது காலமே 1972ம் ஆண்டுக்குப் பிற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்காலம். இவர்களின் காலமே தமிழரின் வரலாற்றில் பொற்காலம். இந்தப் பொற்காலத்தில் தான் எமது உரிமைகளைப் பெறுவதற்கான இந்தத் தர்ம யுத்தத்திற்கு அனைத்து மக்களும் எந்தவித வேறுபாடுகளுமின்றி முன்வந்தால் தமிழீழத்தில் ஆனையிறவு முகாம் மட்டுமல்ல, எந்த முகாமும் இருக்க முடியாது.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் தேவர் அண்ணா, விடுதலைப் புலிகளின் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுத் தலைமைச் செயலக உறுப்பினர் புவியரசன் ஆகியோரும் உரையாற்றினர்.

## இராசி பலன்

20-08-1991

செவ்வாய்க்கிழமை

தமிழுக்கு ஆவணி 04

ஏகாதசி முழுவதும்: மூலம் பி.இ. 3-46வரை: அமிர்தசித்தயோகம் இராகுகாலம் மாலை 3-05 முதல் 4-35 வரை: சுப நேரம் காலை 10-35 முதல் 12-05 வரை ஏகாதசிவிரதம்.

மேடம்: யோசனை மிகுதி, தொழில் பாதிப்பு, குடும்ப பிரிவு.

இடபம்: மன உளைச்சல், கடன் தொல்லை, குடும்ப மோதல்.

மிதுனம்: பெரியோர் சகாயம், தொழில் லாபம், வெற்றி வாய்ப்பு

கடகம்: தொழில் உறவு, மனமாற்றம், குடும்பசுகம்.

சிங்கம்; ஏமாற்றம், பகைவர் துன்பம், பணகுறை.

கன்னி: பணியாள் தொல்லை மகிழ்ச்சிக்குறைவு, அவசர முடிவு.

துலாம்: தடுமாற்றம், வெகுஜன மதிப்பு, காரியசித்தி

விருச்சிகம்: தனியான போக்கு, இனசன விரோதம், தொழில் மந்தம்.

தனுசு: உயர்வான ஸ்தானம், பணபலம், வெகுமதி.

மகரம்: முதியோர் பகை. அவசர முடிவு, கவலைமிகுதி.

கும்பம்: தப்பபிப்பிராயம், பயணம், பணச்செலவு,

மீனம்: தொழில் முயற்சி, விரோதம், நற்செய்தி.

- ஜோஸ்யர்

## 500 ஆசிரியர்கள் புதிதாக நியமனம்

(வட்டுக்கோட்டை)

யாழ். மாவட்டத்தில் தற்போது நிலவி வரும் ஆசிரியர் பற்றுக்குறையை நீக்கும் முகமாக 500 ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர்.

ஆகக்குறைந்த தராதரமாக க. பொ. த உயர்தரத்தைக் கொண்டு விரைவில் நியமிக்கப்படவுள்ள இந்த ஆசிரியர்கள் 1992ம் ஆண்டிலிருந்தே பெரும்பாலும் சம்பளத்தைப் பெற்றுக்கொள்வார்கள். அதுவரை இவர்கள் இலவசமாகக் கற்பிக்குமாறு கேட்கப்படலாமென அறியக்கிடக்கின்றது.

மாதந்தோறும் மாணவர்களிடமிருந்து ஒரு ரூபா வீதமும் ஆசிரியர்களிடமிருந்து 5 ரூபா வீதமும் அறவிடப்படும் பணத்திலிருந்தே இந்த ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படவுள்ளது. இந்த ஆசிரிய நியமனத்தினால் வசதிகள் சேவைகள் கட்டண ஆசிரியர்கள் பாதிக்கப்படமாட்டார்களெனவும் தெரிவிக்கப் படுகிறது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கல்விப் பிரிவினரின் ஆலோசனைக்கிணங்க இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளமைகுறிப்பிடத்தக்கது (139)

## நஞ்சுக்குப் பலி

[பூநகரி]

பூநகரியில் தேநீர்க்கடை நடாத்திவந்த கிளிநொச்சி வாசியான பால்ராஜ் என்பவர் (வயது 60) நச்சுத்திராவகம் அருந்தியநிலையில் பூநகரி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மரணமானார். (23)

## தீவுப்பகுதி எங்கும் போர்க்காலக் கருத்தரங்கு

(வேலணை)

தீவகத்தின் பல பகுதிகளிலும் தற்பொழுது போர்க்காலக்கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன, கடந்த 18-ம் திகதி ஆரம்பமான இக்கருத்தரங்குகள் எதிர்வரும் 26-ம் திகதி வரையில நடைபெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று செவ்வாய் வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்திலும்வேலணை கிழக்கு ஒட்டிபுலம் வேலணை மேற்கு முடிப் பிள்ளையார் கோவிலடியிலும் நடைபெறும்

நாளை வேலணை கிழக்கு தவிடுதின்னிப் பிள்ளையார் ஆலயத்திலும் 22ம் திகதி வேலணை மேற்கு அம்பிகை நகர் ஈச்சம்பத்தை அம்மன் கோவிலடி, தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தின் அருகாமையிலும் 23ம் திகதி சிற்பனை முருகன் கோயில், இலந்தை வனம் சித்திவிநாயக ஆலயம், வேலணை வடக்கிலும் 24ம் திகதி மண்கும்பான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, மண்கும்பான் மத்தி மாவீரர் விளையாட்டு மைதானத்திலும் 25ம் திகதி அல்லைப் பிட்டி சந்தி, மண்டைதீவு கிழக்கு முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் 26ம் திகதி அல்லைப்பிட்டி கிழக்கு ஞானவைரவர் ஆலயம், மண்டைதீவு மேற்கிலும் இப்போர்க்கால கருத்தரங்குகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (75)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### 1990 1-ம், 2-ம், 3-ம், 4-ம் கல்வியாண்டு பரீட்சைகள்

கலை / வர்த்தகம் / முகாமைத்துவம்

மேற்படி பரீட்சைகள் யாவும் கீழ்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன. மாணவர்கள் கவனத்திற்கு கொள்ளவும்.

| பரீட்சை | தொடங்கும் திகதி | முடிவடையும் திகதி |
|---|---|---|
| 1-ம் ஆண்டு கலை/வர்த்தகம்/முகாமைத்துவம் | 19-09-91 | 28-09-91 |
| 2ம் ஆண்டு பொது/சிறப்பு தேர்வு பகுதி-I கலை/வர்த்தகம்/முகாமைத்துவம்-I முதுகலைமாணித் தகுதி காண் தேர்வு | 30-09-91 | 11-10-91 |
| 3ம் ஆண்டு பொது/சிறப்பு பகுதி-II கலை/வர்த்தகம்/முகாமைத்துவம் பகுதி-III முதுகலைமாணித் தகுதிகாண் தேர்வு | 12-10-91 | 25-10-91 |
| 4ம் ஆண்டு சிறப்பு பகுதி-III கலை/வர்த்தகம்/முகாமைத்துவம் பகுதி-III முதுகலைமாணித் தகுதி காண் தேர்வு | 26-10-91 | 31-10-91 |

### இராமநாதன் நுண்கலைப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் ஆண்டு | 30-09-91 | 02-10-91 |
| 2ம் ஆண்டு | 03-10-91 | 05-10 91 |
| 3ம் ஆண்டு | 07-10-91 | 09-10-91 |
| 4ம் ஆண்டு | 04-11-91 | 08-11-91 |

[எ-1513] பதிவாளர்.

# இந்தியாவும் பாகிஸ்தானும் மற்றொரு போரை சந்திக்கும்?

(வாஷிங்டன்)

காஷ்மீர் விவகாரம் குறித்து இந்தியாவும், பாகிஸ்தானும் மீண்டும் ஒரு போரைச் சந்திக்கவேண்டிய ஒரு நிலை அதிகரித்துவருவதாகப் பாகிஸ்தான் பிரதமர் ஜனுப் நவாப் ஷெரீப் எச்சரித்துள்ளார்.

அமெரிக்கச் சஞ்சிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இவ்விவகாரம் குறித்து இரு நாடுகளுக்கும் இடையில் நாளுக்குநாள் பெரும் பதற்றம் அதிகரித்துவருகிறது. இது மீண்டும் ஒரு போருக்கு வழி கோலலாம்.

பாகிஸ்தான் அணுக்குண்டு எதையும் தயாரிக்கவில்லை. இதனைக் காரணம் காட்டி, பாகிஸ்தானுக்கான உதவிகள் அனைத்தையும் அமெரிக்கா நிறுத்தியிருப்பது ஒருதலைப் பட்சமான செயல் என்றும் கூறியுள்ளார். (சி)

## அஸாம் முதல்வரை கொலை செய்ய முயற்சி

(புதுடில்லி)

அஸாம் முதல்வர் திரு. ஹிதேஸ்வர் சைக்கிலாவை கொலை செய்யும் நோக்கில் வந்த இரு 'உல்பா' தற்கொலைப்படை தீவிரவாதிகளை பொலிஸார் கைது செய்துள்ளனராம்.

இவ்விருவரிடமுமிருந்து சயனேட் வில்லைகளும், பிஸ்ரல்களும் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை அஸாமில் முக்கிய பாலமொன்றிலிருந்து 10 கிலோ கிராம் குண்டும் அதனை இயக்கும் கருவியும் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## சோவியத்தில் இடம்பெற்ற....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## அவசரகால நிலை பிரகடனம்

நாட்டின் பெயர் குறிப்பிடப்படாத சில பிரதேசங்களில் ஆறு மாத காலத்திற்கு அவசரகாலநிலை தற்போது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது இந்நடவடிக்கைளுக்குப் பின் இராணுவ வாகனங்கள் பல கிரெம்ளின் நோக்கி விரைந்தன.

## படைகள் சூழ்ந்துகொண்டன

டாஸ் செய்தி ஸ்தாபனத்தைச் சுற்றி படைகள் சூழ்ந்துள்ளதுடன் இஸ்வெஸ்தியா, மொஸ்கோ நியூஸ் ஆகிய சுதந்திரச் செய்தி பத்திரிகை அலுவலகங்களுக்கு வெளியே பல இராணுவ கவச வாகனங்கள் நிறுத்தப் பட்டிருந்தன.

வெகுஜன தொடர்பு சாதனங்கள் கண்டிப்பான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான சட்டத்தையும் தீவிரவாதக்குழு பிரகடனம் செய்துள்ளது.

## உதவியாளர் ஆருடம்

சோவியத் அதிபரின் பதவி கவிழ்க்கப்படலாமென அவரது முன்னைய உதவியாளரும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினருமான திரு. ஜக்கோலாய் ஆருடம் கணித்திருந்தார்.

## புதியவர் பதவி நிலைக்குமா?

பதவி ஏற்றுள்ள புதிய அதிபரின் பதவி நிரந்தரமானதா என்பது குறித்த உத்தியோகபூர்வ அறிவித்தல் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

## நேட்டோவின் அவசர கூட்டம்

வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளான நேட்டோ இவ்விவகாரம் சம்பந்தமாக விவாதிக்க அவசரக் கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

11 உறுப்பினர்களைக் கொண்ட இவ்வமைப்பின் முக்கிய பிரதிநிதிகள் பிறெசில்ஸில் கூடி, நிலைமை பற்றி ஆராயவுள்ளன.

ஐரோப்பிய சமுதாய அமைப்பைச் சேர்ந்த நாடுகளும் இன்று அவசரக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளன.

## எண்ணெய் விலை அதிகரித்தது

உலகில் பங்குச் சந்தைகள் வீழ்ச்சியுற்றன. டொலரின் பெறுமதி அதிகரித்தது எண்ணெய் விலை என்றுமில்லாதவாறு அதிகரித்தது.

## பொது வேலைநிறுத்தம்

நாட்டின் மிகப்பெரிய குடியரசாகிய ரஷ்ய சம்மேளனத்தின் தலைவர் மொறிஸ் ஷெல்சின் கொர்பச்சேவ் பதவி கவிழ்ப்பை கண்டித்துள்ளதுடன் இதற்கு எதிராக பொது வேலை நிறுத்தம் ஒன்றிற்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

## உலகத் தலைவர்கள் அதிர்ச்சி

ரஷ்யாவுக்கான சகல பொருளாதார உதவிகளையும் அமெரிக்கா நிறுத்தி விட்டதாக ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்தார்.

கொர்பச்சேவ் பதவி கவிழ்க்கப்பட்டது குறித்து பல உலகத் தலைவர்கள் தமது அதிர்ச்சியைத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இச்செய்திகவலையளிப்பதாக தெரிவித்துள்ளதுடன் சோவியத்யூனியனில் இடம்பெற்ற இந்நடவடிக்கையினால் பாரதூரமான விளைவுகள் ஏற்படக் கூடுமென்று எச்சரிக்கை செய்துள்ளார்.

அமெரிக்கா உட்பட ஏனைய நாடுகளுடனான உறவுகளும் இதனால் பாதிக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சோவியத்தில் ஸ்திர ஆட்சியை நிலவச் செய்யவேண்டுமென ஜப்பானிய தலைவர்கள் கேட்டுள்ளனர்.

சோவியத் ஜனாதிபதி பதவி கவிழ்க்கப்பட்ட சம்பவம் ஆழ்ந்த கவலையளிப்பதாகவும் கிழக்கு, மேற்கு உறவுகளிலும் உலக சமாதானத்திலும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துமென்றும் பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் திருமதி மார்க்கிறெட் தட்சர் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. செயலாளர் திரு. ஜாவியா பெரஸ் டி கியூலர் இந்தச் செய்தி மிகுந்த ஆச்சரியத்தை அளிப்பதாகக் கூறினார்.

புதிய ஆட்சியாளர்கள் தமது உள்நாட்டு வெளிநாட்டு கொள்கைகளை வெளியிடும் வரை கொர்பச்சேவின் பதவி நீக்கத்தின் உண்மை விளைவுகள் பற்றி கூறமுடியாதென்று பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

ஜேர்மன் இது தொடர்பாக கருத்து எதுவும் வெளியிட மறுப்புத் தெரிவித்துள்ளது.

கிழக்கு ஜேர்மனியில் சோவியத் படைகள் தற்போதும் நிலை கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கொர்பச்சேவின் பதவி நீக்கத்தினால் சோவியத்யூனியனின் நிலை எவ்வாறிருக்கும் என்பதனை அறிய அகில உலகும் ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறது.

## காரைநகரிலிருந்து ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வலந்தலைச் சந்தியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று நண்பகல் சுமார் ஒரு மணி நேரம் வரை பொன்னாலையை நோக்கிப் பலத்த ஷெல் தாக்குதலையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

நண்பகல் 2-30 மணியளவில் ஆரம்பித்த இத்தாக்குதல். 3-30 மணிவரை இடம்பெற்றது. பத்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டன.

பொன்னாலை கிருஷ்ணன் கோயிலுக்குப் பின்னால் நின்ற சிலர், ஷெல் தாக்குதலில் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது. (சி)

## நிவாரண நிறுத்தத்தில் மாற்றம் எதுவுமில்லை

(கொழும்பு)

வடக்குக்-கிழக்கில் அகதி முகாம்களுக்கு வெளியே இருப்பவர்களுக்கான நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட முடிவில் எதுவித மாற்றமும் இல்லையெனப் புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

அரசின் இந்த முடிவைப் பரிசீலனை செய்யுமாறு எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கையையும் அரசு நிராகரித்துள்ளது.

நிவாரணத்தைத் தொடர்ந்தும் வழங்குமாறு கடந்த வாரம் வடபகுதியில் இருந்து ஜனாதிபதிக்கு மகஜர்கள் அனுப்பப்பட்டதும் தெரிந்ததே. (சி)

### மாநாடு

(யாழ்ப்பாணம்)

இலவச உணவு முத்திரை வழங்குவது சம்பந்தமான இறுதி முடிவு எதிர்வரும் வியாழக்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ள உயர்மட்டக் கூட்டத்தில் முடிவுசெய்யப்படவுள்ளது.

ப. நோ. கூ. சங்கங்களின் மூலம் அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசிய உணவுப்பொருள்களையும் சகாய விலையில் வழங்குவது சம்பந்தமான இறுதிமுடிவும் மேற்படி மாநாட்டில் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (வி)

### அவசரக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளின் உடனடித் தேவைகள் பற்றியும் அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடுவதற்காக மருதனாமடம், தென்மராட்சி, வடமராட்சி கல்விக் கோட்ட பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர்களையும், பொருளாளர்களையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத அதிபர்களையும் கோட்ட ரீதியாக நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு மருதனாமடக் கல்வி அலுவலகத்திற்கும் 23-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரிக்கும் 24-ம் திகதி சனிக்கிழமை மு. ப. 10-00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கும் சகலரையும் தவறாது வருகை தரும் வண்ணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### புலிகளின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை கோவா மாநிலத்தில் புலிகளின் ஆதரவாளர்களான மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (சி)

### ஆனையிறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

இதேவேளை விமானப்படை இப்பகுதியில் குண்டுவீச, 'பலவேகய' படையினர் தெற்குப் பகுதியான பரந்தனை நோக்கி முன்னேற தயாராகிவருவதாகவும் நேற்றிரவு அச்செய்திகள் தெரிவித்தன.

பரந்தன், கிளிநொச்சிப்பகுதியில் பெருமளவு புலிகள் நிலை கொண்டிருப்பதாகவும் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (சி)

### கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மேலும் உசார்படுத்தப்பட்டன.

குண்டு தயாரிப்பதில் நிபுணத்துவம்பெற்ற இந்தக் குழுவின் நடமாட்டங்கள் குறித்து விழிப்பாக இருக்கும்படி பாதுகாப்பு அமைச்சு பொதுமக்களுக்கு எச்சரிக்கை செய்துள்ளது.

### உடல்நலக்குறைவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யூனிஸ்ட் கட்சியின் தலைவராகவும் 1989இல் சோவியத் நாட்டின் அதிபராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கைச்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தருமாறு கோரியதாகவும் அது மறுக்கப்பட்டதால் அங்கு நின்ற சிறுவனை கத்தியால் குத்திவிட்டு வந்தவர்கள் தப்பிவிட்டார்களாம்.

சம்பந்தப்பட்டவர்களை பொலிஸார் தேடிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி)

### யு. எஸ். எய்ட்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு மீளக்குடியமர தலா 2 ஆயிரம் ரூபாவும் மேற்படி நிறுவனம் வழங்கிவந்தது.

கடந்த ஒருவருடமாக இந்த உதவிகள் நிறுத்தப்பட்டிருந்தது. இதனை மீண்டும் வழங்கும்படி யாழ். அரச அதிபரால் தற்போது கேட்கப்பட்டுள்ளது. (வி)

### கர்நாடகத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொலை செய்துகொண்டதாகவும். சயனைட் அருந்திய மற்றொருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பெங்களூர் நகரை அடுத்துள்ள புனர்கிண்டி கிராமத்தில் நேற்று அதிகாலை நடந்த தேடுதல் நடவடிக்கையில் ஒரு தம்பதியினர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுவரை கர்நாடக மாநிலத்தில் 5 போராளிகள் சயனைட் அருந்தி இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள இன்னொரு கிராமத்தில் எட்டுப் போராளிகள் ஒழித்துள்ளதாகக் கூறப்படும் வீடு ஒன்றை பொலிசாரும். சிறப்பு புலனாய்வுக் குழுவினரும், தேசிய பாதுகாப்பு காவலர்களும் முற்றுகையிட்டுகண்காணித்து வருகிறார்கள்.

சிறப்பு புலனாய்வுக் குழுத் தலைவர் கார்த்திகேயன் பெங்களூரிலிருந்து தேடுதல்களை நேரடியாகக் கண்காணித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Regestered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81